# மணப்பாறை நகராட்சி

**2022 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 30.11.2022-ம் நாள் புதன்கிழமை காலை 10.30 மணிக்கு அறிஞர் அண்ணா நகர்மன்ற கூட்ட அரங்கில் நடைபெற்ற சாதாரணக்கூட்டம் கூட்ட நடவடிக்கைகள் விபரம்**

<table>
<tr><th>மன்ற கூட்டம் நடைபெற்ற நாள்</th><th>வரிசை எண் மற்றும் மன்ற கூட்டப் பொருள்</th><th>தீர்மானம்</th></tr>
<tr><td>30.11.2022</td><td>

**பொருள் – 1**

இந்நகராட்சி பொது சுகாதார பிரிவில் உள்ள BOV வாகனம் 10 எண்ணிக்கை லித்தியம் பேட்டரி, சார்ஜர் மற்றும் பழுது நீக்கம் பணிக்கு ரூ.7.50 இலட்சத்திற்கு இந்நகர்மன்றம் தனது தீர்மான எண்.21, நாள்.22.09.2022-ல் அனுமதி வழங்கப்பட்டுள்ளது. மேற்படி பழுதுப்பணிகளை மேற்கொள்ள 10.11.2022 அன்று மறு ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்க்கண்ட விபரப்படி நிறுவனத்திடமிருந்து ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளது.

| வ. எண். | நிறுவனத்தின் பெயர் | ஒப்பந்தப்புள்ளி கொடுத்த விபரம் |
|---|---|---|
| 1 | ஸ்ரீ பவர் எலக்ட்ரானிக்ஸ், 18-2, பிரம்மன் கோவில் தெரு, கும்பகோணம். | (1BOV வாகனத்திற்கு ரூபாயில்) ரூ.80,000/- |
| 2 | ரிஸி மோட்டார்ஸ், 15, காமகோடி நகர், பாலக்கரை, கும்பகோணம். | (1BOV வாகனத்திற்கு ரூபாயில்) ரூ.74,957/- |

மேற்படி வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள ரிஸி மோட்டார்ஸ், கும்பகோணம் நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு;-**

1.மன்றம் அனுமதிக்கலாம்

(ந.க.எண்.1392/2022/எச்1)

</td><td>

**தீர்மான எண்.85**

அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது. திருமதி.மு.வசந்தாதேவி , 14-வது வார்டு நகர்மன்ற உறுப்பினரின் ஆட்சேபனைக் கடிதம் ஒட்டப்பட்டுள்ளது.

</td></tr>
</table>

30.11.2022

**பொருள் – 2**

இந்நகராட்சியில் இயங்காத நிலையிலுள்ள கீழ்க்கண்ட விபரப்படியான வாகனங்களை பொது ஏலத்தில் விட இந்நகர்மன்ற தீர்மான எண்.20, நாள்.22.09.2022-ல் அனுமதி அளிக்கப்பட்டுள்ளது. மேற்படி வாகனங்களை 17.11.2022-ம் தேதியன்று மறு பொது ஏலம் மற்றும் மூடி முத்திரையிடப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள் கோரியதில் பொது ஏலத்தில் கேள்வி கோரியது மற்றும் ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்ட விபரம் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

**<u>பொது ஏலம் / ஒப்பந்தப்புள்ளி பெறப்பட்ட விபரம்</u>**

| வ. எண் | வாகனம் / வாகன எண் | பொறியாளர், அரசு தானியங்கி பணிமனை, திருச்சிராப்பள்ளி நிர்ணயித்த மதிப்பீட்டு தொகை ரூபாயில் | உயர்ந்தபட்ச விலை கோரியவர்களின் விபரம் | | | |
|---|---|---|---|---|---|---|
| | | | திரு.வி.ஆனந்தன், 4/114, வலசுப்பட்டி, கோவில்பட்டி | | சூர்யா பிரதர்ஸ், எம்.லெனின், ஜி1, சொக்கலிங்கபுரம், மணப்பாறை. | |
| | | | ஏலக் கேள்வியில் கோரப்பட்ட தொகை | ஒப்பந்தப்புள்ளியில் அளிக்கப்பட்ட தொகை | ஏலக்கேள்வியில் கோரப் பட்ட தொகை | ஒப்பந்தப்புள்ளியில் அளிக்கப்பட்ட தொகை |
| 1 | குப்பை லாரி / TDY 1660 | 33,000/- | ரூ.3,55,000/- | ரூ.1,50,000/- | ரூ.3,51,000/- | ரூ.2,51,000/- |
| 2 | குப்பை லாரி/ TAX 2402 | 35,000/- | ரூ.3,70,000/- | ரூ.1,70,000/- | ரூ.3,66,000/- | ரூ.2,00,000/- |
| 3 | குப்பை லாரி/ TN45 F 7276 | 21,000/- | ரூ.1,80,000/- | ரூ. 60,000/- | ரூ.1,76,000/- | ரூ.1,18,000/- |
| 4 | குப்பை லாரி/ TN45 J 8655 | 22,000/- | ரூ.1,75,000/- | ரூ. 50,000/- | ரூ.1,76,000/- | ரூ.99,000/- |
| 5 | குடிநீர் லாரி/ TN45 L 7670 | 70,000/- | ரூ.1,90,000/- | ரூ.70,000/- | ரூ.1,86,000/- | ரூ.60,000/- |

**தீர்மான எண்.86**

அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது. திருமதி.மு.வசந்தாதேவி ,14-வது வார்டு நகர்மன்ற உறுப்பினரின் ஆட்சேபனைக் கடிதம் ஒட்டப்பட்டுள்ளது.

**அலுவலகக்குறிப்பு:-**

1. ஏல இன வரிசை எண்.1-ல் உள்ள வாகனம் TDY 1660-க்கு உயர்ந்தபட்ச கேள்வியாக ரூ.3,55,000/-ம், வரிசை எண்.2-ல் உள்ள வாகனம் TAX 2402 க்கு உயர்ந்தபட்ச கேள்வியாக ரூ.3,70,000/-ம், வரிசை எண்.3-ல் வாகனம் TN45F7276-க்கு உயர்ந்தபட்ச கேள்வியாக ரூ.1,80,000/-ம் மற்றும் வரிசை எண்.5-ல் உள்ள வாகனம் TN45L7670- க்கு உயர்ந்தபட்ச கேள்வியாக ரூ.1,90,000/-ம் கோரிய திரு.வி.ஆனந்தன், 4/114, வலசுப்பட்டி, கோவில்பட்டி என்பவரின் ஏலக்கேள்வித் தொகை பொறியாளர், அரசு தானியங்கி பணிமனை, திருச்சிராப்பள்ளி நிர்ணயித்த மதிப்பீட்டு தொகையை விட கூடுதலாக உள்ளதால் திரு.வி.ஆனந்தன் என்பவரின் உயர்ந்தபட்ச ஏலக்கேள்வி தொகையை ஏற்கலாம்.

2. ஏல இன வரிசை எண்.4-ல் உள்ள வாகனம் TN45J8655-க்கு உயர்ந்தபட்ச கேள்வியாக ரூ.1,76,000/- கோரிய சூர்யா பிரதர்ஸ், எம்.லெனின், ஜி1, சொக்கலிங்கபுரம், மணப்பாறை என்பவரின் ஏலக்கேள்வித் தொகை பொறியாளர், அரசு தானியங்கி பணிமனை , திருச்சிராப்பள்ளி நிர்ணயித்த மதிப்பீட்டு தொகையை விட கூடுதலாக உள்ளதால் சூர்யா பிரதர்ஸ், எம்.லெனின், என்பவரின் உயர்ந்தபட்ச ஏலக்கேள்வி தொகையை ஏற்கலாம்.

(ந.க.எண்.3741/2021/எச்1)

---

30.11.2022

**பொருள் – 3**

இந்நகராட்சி பொது சுகாதார பிரிவில் குடிநீர் மற்றும் பொது சுகாதார பணிக்கு பயன்படுத்தப்பட்டு தற்போது இயங்காத நிலையில் உள்ள 5 வாகனங்களுக்கு பொது ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி விளம்பரத்தை செய்தி மக்கள் தொடர்பு அலுவலர் மூலம் நாளிதழில் விளம்பரம் செய்ய கோரப்பட்டதில் கீழ்க்கண்டவாறு விளம்பரம் செய்யப்பட்டுள்ளது.

| வ. எண். | ஏலம் / ஒப்பந்தப்புள்ளி நாள் | விளம்பரம் செய்யப்பட்ட நாளிதழ் | விளம்பரம் செய்யப்பட்ட நாள் | நிறுவனத்தின் பெயர் | தொகை |
|---|---|---|---|---|---|
| 1 | 18.10.2022 | தினகரன் | 01.10.2022 | Bright advertising, Chennai | ரூ.10820/- |
| 2 | 17.11.2022 | தினகரன் | 03.11.2022 | Bright advertising, Chennai | ரூ.13524/- |
| | மொத்தம் | | | | ரூ.24,344/- |

மேற்கண்ட விளம்பர கட்டணத் தொகை ரூ.24,344/-ஐ வழங்கவும், செலவினத் தொகையினை வருவாய் நிதியில் மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு:-**

மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மான எண்.87**

அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

<table>
<tr>
<td>30.11.2022</td>
<td>

**பொருள் – 4**

அரசாணை எண்.529 உள் (போக்குவரத்து) துறை நாள்.24.11.2021-ன்படி, இந்நகராட்சியில் பராமரிப்பில் இருந்து வந்த சுமார் 15 ஆண்டுகள் மற்றும் 2.00 இலட்சம் கி.மீட்டருக்கு மேலாகவும் இயங்கி தற்போது இயங்காத நிலையில் உள்ள கீழ்க்கண்ட எண்ணுள்ள வாகனத்தை கழிவு நீக்கம் செய்ய தமிழ்நாடு மோட்டார் வாகனம் பராமரிப்புத் துறை மண்டல இயக்குநர், அரசு தானியங்கி பணிமனை, திருச்சிராப்பள்ளி அவர்களின் கடிதம் செ.மு.எண்.அ6/3889/2022, நாள்.23.11.2022-ன்படி, கழிவு நீக்க சான்றிதழ் பெறப்பட்டுள்ளது. எனவே கீழ்க்கண்ட வாகனத்தை பொது ஏலம்/ ஒப்பந்தப்புள்ளி விட மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

| வ.எண். | வாகனம் | வாகன எண் |
|---|---|---|
| 1 | கழிவு நீர் டேங்கர் லாரி | TN45 H 3151 |

**<u>அலுவலகக்குறிப்பு;-</u>**

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. நாளிதழில் விளம்பரம் செய்ய ஆகும் செலவினத் தொகையினை வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளலாம்.

(ந.க.எண்:3741/2021/எச்1)

</td>
<td>

**தீர்மான எண்.88**

அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

</td>
</tr>
<tr>
<td>30.11.2022</td>
<td>

**பொருள் – 5**

இந்நகராட்சியில் பொது சுகாதார பிரிவில் பணிபுரிந்து வரும் தூய்மை பணியாளர்களுக்கு மூன்று வருடங்களுக்கு ஒருமுறை மழை கோட் (Rain Coat) நகராட்சி மூலம் வழங்கப்பட வேண்டும் என நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் கடிதம் ந.க.எண்.1068/2021/எச்2, நாள்.10.11.2021-ல் தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்நகராட்சியில் பணிபுரியும் தூய்மை பணியாளர்களுக்கு மழை கோட் (Rain Coat) வழங்கப்பட்டு ஆறு வருடங்களுக்கு மேலாகிவிட்டது. தூய்மை பணியாளர்களின் நலன் கருதியும், மழைக்காலங்களில் தூய்மை பணிகள் தொய்வின்றி நடைபெறும் வகையிலும் நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் கடிதத்தின்படியும், இந்நகராட்சியில் பணிபுரியும் 63 தூய்மை பணியாளர்களுக்கு மழை கோட் (Rain Coat) வாங்குவதற்கு ஆகும் உத்தேச செலவின தொகை ரூ.59535/-க்கும் மற்றும் மேற்படி மழை கோட்டினை (Rain Coat) அரசு அங்கீகாரம் பெற்ற தமிழ்நாடு மல்டிபர்பஸ் இண்டிகோ சர்வீஸ், திருச்சிராப்பள்ளி அவர்களிடமிருந்து நேரடியாக வாங்குவதற்கும்

</td>
<td>

**தீர்மான எண்.89**

அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

</td>
</tr>
</table>

| | | |
|---|---|---|
| | மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>**<u>அலுவலகக்குறிப்பு;-</u>**<br>1. மன்றம் அனுமதிக்கலாம்.<br>2. மேற்படி பணிக்கான செலவினத்தை நகராட்சி பொது நிதியிலிருந்து செலவு செய்துகொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.<br>(ந.க.எண்.2175/2022/எச்1) | |
| 30.11.2022 | **பொருள் – 6**<br>இந்நகராட்சியில் பொது சுகாதார பிரிவில் பணிபுரிந்து வரும் தூய்மை பணியாளர்களுக்கு வருடத்திற்கு ஒருமுறை இருபாலருக்கும் காலணி (ரூ.225 + GST விலைக்கு மிகாமல்) ஒரு ஜோடி காலணி நகராட்சி மூலம் வழங்கப்பட வேண்டும் என நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் கடிதம் ந.க.எண்.1068/2021/எச்2, நாள்.10.11.2021-ல் தெரிவிக்கப்பட்டுள்ளது. அதனடிப்படையில் இந்நகராட்சியில் பணிபுரியும் ஆண் தூய்மை பணியாளர்-44 நபர்களுக்கும், பெண் தூய்மை பணியாளர் -19 நபர்களுக்கும் ஆக மொத்தம் 63 தூய்மை பணியாளர்களுக்கும் ஒரு ஜோடி காலணி வாங்குவதற்கு ஆகும் உத்தேச செலவின தொகை ரூ.17000/-க்கும் மற்றும் மேற்படி காலணிகளை அரசு அங்கீகாரம் பெற்ற தமிழ்நாடு மல்டிபர்பஸ் இண்டிகோ சர்வீஸ், திருச்சிராப்பள்ளி அவர்களிடமிருந்து நேரடியாக வாங்குவதற்கும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>**<u>அலுவலகக்குறிப்பு;-</u>**<br>1. மன்றம் அனுமதிக்கலாம்.<br>2. மேற்படி பணிக்கான செலவினத்தை நகராட்சி பொது நிதியிலிருந்து செலவு செய்துகொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.<br>(ந.க.எண். 2178/2022/எச்1) | **தீர்மான எண்.90**<br>அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது. |
| 30.11.2022 | **பொருள் – 7**<br>இந்நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்,6 மற்றும் வார்டு எண்.7-க்குட்பட்ட பகுதிகளான அண்ணாவி நகர் வடக்கு தெரு, ஈஸ்வரன் கோவில் தெரு மற்றும் ரயில்வே பாதை அருகே ஆகிய இடங்களில் மண் குவியல்களகவும், திட்டுகளாகவும் உள்ளது. எனவே அவ்வப்போது பெய்யும் மழையினால் மண் சரிந்து அதன் அருகாமையில் உள்ள மழைநீர் வடிகாலில் மழைநீர் செல்ல வழியில்லாமல் அடைப்பு ஏற்படுகிறது. இதனால் மேற்படி பகுதியில் உள்ள குடியிருப்பு கட்டிடங்களுக்குள் மழைநீர் புகுந்து பொதுமக்களுக்கு இடையூறாகவும், தொற்று நோய் ஏற்படும் அபாயம் நிலவுகிறது. எனவே அப்பகுதியில் வசிக்கும் பொதுமக்களின் நலனை கருத்தில்கொண்டு மழைநீர் வடிகாலில் ஏற்பட்டுள்ள அடைப்புகளை சரிசெய்வதற்கு | **தீர்மான எண்.91**<br>அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது. |

நகராட்சியில் போதிய வாகன வசதிகள் இல்லாத காரணத்தினால் தனியார் நிறுவனத்திடமிருந்து JCB இயந்திரம் மற்றும் டிராக்டர் வாடகை அடிப்படையில் பணி மேற்கொள்ள நகர்மன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று 14.10.2022-ம் தேதி ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்க்கண்டவாறு இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளது.

| வ. எண். | நிறுவனத்தின் பெயர் | ஒப்பந்தப்புள்ளி கொடுத்த விபரம் | |
|---|---|---|---|
| | | JCB இயந்திரம் (மணிக்கு) | டிராக்டர் இயந்திரம் (நாள் ஒன்றுக்கு) |
| 1 | JTP Earth Movers, Kovilpatty Road, Manapparai | ரூ.1100/- | ரூ.4000/- |
| 2 | Sri Kimaran Eath Movers, Madurai Road, Manapparai | ரூ.1300/- | ரூ.4500/- |

மேற்படி வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள JTP Earth Movers, Kovilpatty Road, Manapparai நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளியை எற்க மன்றத்தின் அனுமதி வேண்டடப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு;-**

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்படி பணியின் அவசர அவசியம் கருதி நகர்மன்ற தலைவரின் முன் அனுமதி பெற்று குறைந்த ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள JTP Earth Movers, Kovilpatty Road, Manapparai அவர்களுக்கு வேலை உத்தரவு வழங்கி தொடர் நடவடிக்கை மேற்கொண்டதை மன்றம் அங்கீகரிக்கலாம்.
3. மேற்படி பணிக்கான செலவினத்தை நகராட்சி பொது நிதியிலிருந்து செலவு செய்துகொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்

(ந.க.எண்.1888/2022/எச்1)

30.11.2022

**பொருள் – 8**

இந்நகராட்சியில் பொது சுகாதார பிரிவில் அனைத்து வார்டுகளிலும் உள்ள வீடு மற்றும் வணிக நிறுவனங்களிலிருந்து உருவாகும் மக்காத பிளாஸ்டிக் கழிவுகள் மற்றும் இதர பொருட்களை நகராட்சி வாரச்சந்தையில் உள்ள MCC மையத்திலிருந்து அரியலூர் அல்ட்ராடெக் சிமெண்ட் ஆலைக்கு தனியார் ஒப்பந்த நிறுவன வாகனம் மூலம் அனுப்பும் பணி நடைபெற்று வருகிறது. தனியார் நிறுவனத்தின் இப்பணியில் தொய்வு ஏற்படும் போது கழிவுகள் அதிகமாக சேர்ந்து திடக்கழிவு மேலாண்மை பணி பாதிப்பு ஏற்படுகிறது. அச்சமயத்தில் நகராட்சி மூலம் கழிவுகளை உடனடியாக அரியலூர் அல்ட்ராடெக் சிமெண்ட் ஆலைக்கு அனுப்புவதற்கு வாகன

**தீர்மான எண்.92**

அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது. திருமதி.மு.வசந்தாதேவி, 14-வது வார்டு நகர்மன்ற உறுப்பினரின் ஆட்சேபனைக் கடிதம் ஒட்டப்பட்டுள்ளது.

<table>
<tr>
<td></td>
<td>வாடகை செலவு உட்பட உத்தேச செலவினம் ரூ.2.00 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.<br><u>அலுவலகக்குறிப்பு;-</u><br>1. மன்றம் அனுமதிக்கலாம்.<br>2. மேற்படி பணிக்கான செலவினத்தை நகராட்சி பொது நிதியிலிருந்து செலவு செய்துகொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.<br>(ந.க.எண். 2027/2022/எச்1)</td>
<td></td>
</tr>
<tr>
<td>30.11.2022</td>
<td>பொருள் – 9<br>இந்நகராட்சிக்கு சொந்தமான மூன்றாண்டு குத்தகை இனங்களில் உள்ள புதிய பேருந்து நிலையத்தில் வந்து செல்லும் பேருந்துகளுக்கு கட்டணம் வசூல் செய்து கொள்ளும் குத்தகை உரிம இனத்திற்கு 23.11.2022–ம் தேதி 7-வது முறையாக மறுபொது ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டது.<br>மேற்படி குத்தகை இனத்திற்கு ஏலத்தில் எவரும் கலந்துகொள்ளவில்லை. ஒப்பந்தப்புள்ளியில் கீழ்க்கண்ட இரண்டு நபர்கள் கலந்து கொண்டு ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ளனர்.
<table>
<tr><th>வ. எண்</th><th>ஏலத்தில் கலந்து கொண்டவர்களின் பெயர்/முகவரி</th><th>ஏலக் கேள்வி தொகை (ரூ. )</th><th>ஒப்பந்தப்புள்ளித் தொகை</th></tr>
<tr><td>1.</td><td>திரு.பி.குமார், த/பெ.பெரியண்ணபிள்ளை, 255/19, ராஜீவ் நகர், புத்தாநத்தம் ரோடு, மணப்பாறை.</td><td>–</td><td>ரூ.5,55,000/- (வருடம் ஒன்றுக்கு)</td></tr>
<tr><td>2.</td><td>திரு.எஸ்.பாலமுருகன், த/பெ.சௌந்தரபாண்டியன், 58எ, அண்ணாவிநகர், மணப்பாறை.</td><td>–</td><td>ரூ.4,50,000/- (வருடம் ஒன்றுக்கு)</td></tr>
</table>
மேற்கண்ட ஒப்பந்தப்புள்ளியில் திரு.பி.குமார், த/பெ.பெரியண்ணபிள்ளை, 255/19, ராஜீவ் நகர், புத்தாநத்தம் ரோடு, மணப்பாறை. என்பவர் உயர்ந்தபட்ச ஒப்பந்தப்புள்ளியாக தொகை ரூ.5,55,000/-க்கு கோரியுள்ளதை மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.<br><u>அலுவலகக்குறிப்பு:</u><br>மேற்படி குத்தகை இனத்திற்கு 7-வது முறை பொது ஏலத்திற்கு கொண்டு வரப்பட்டு யாரும் ஏலம் எடுக்க முன்வராத நிலையில் துறை மூலமாகவே வசூல் செய்யப்பட்டு வருகிறது. மேற்படி உரிமத்திற்கு துறை வசூலுக்கென மாற்றுப்பணி அடிப்படையில் மூன்று துப்புரவு பணியாளரை நியமனம் செய்யப்பட்டுள்ளதில் அதற்கான ஊதியம், மேற்படி</td>
<td>தீர்மான எண்.93<br>அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது.<br>1. திருமதி.மு.வசந்தாதேவி ,14-வது வார்டு நகர்மன்ற உறுப்பினரின் ஆட்சேபனைக் கடிதம் ஒட்டப்பட்டுள்ளது.<br>2. திருமதி.பா.நிர்மலா , 11-வது வார்டு நகர்மன்ற உறுப்பினரின் ஆட்சேபனைக் கடிதம் ஒட்டப்பட்டுள்ளது.</td>
</tr>
</table>

<table>
<tr><td></td><td>இனத்திற்கான ரசீது புத்தகம் மற்றும் பராமரிப்பு செலவினங்கள் துறை மூலம் மேற்கொள்ளப்படுவதால் ஆண்டிற்கு சராசரியாக ரூ.8,86,568/- செலவாகிறது. எனவே மேற்படி இனத்தை செயல்படுத்துவதற்கு ஆகும் கூடுதல் செலவினத்தை கருத்தில் கொண்டும் நிர்வாக நலன் கருதியும் நகராட்சிக்கு ஏற்படும் நிதியிழப்பைத் தவிர்க்கும் பொருட்டும் திரு.பி.குமார், த/பெ.பெரியண்ணபிள்ளை, 255/19, ராஜீவ் நகர், புத்தாநத்தம் ரோடு, மணப்பாறை என்பவர் கோரியுள்ள உயர்ந்தபட்ச ஒப்பந்தப்புள்ளி தொகை ரூ.5,55,000/-யை மன்றம் ஏற்கலாம்.</td><td></td></tr>
<tr><td>30.11.2022</td><td>பொருள் – 10<br>மணப்பாறை நகராட்சியில் செயல்படுத்தப்பட்டு வரும் திட்டப் பணிகளை தஞ்சை முரசு தொழில் மலரில் விளம்பரம் படுத்தியமைக்கு விளம்பரக் கட்டணம் ரூ.17850/- யை மேற்படி நிறுவணத்திற்கு வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது<br><u>அலுவலகக்குறிப்பு</u>:<br>1. மன்றம் அனுமதிக்கலாம்<br>(ந.க.எண். 3125 /2021/இ1)</td><td>தீர்மான எண்.94<br>அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது.</td></tr>
<tr><td>30.11.2022</td><td>பொருள் – 11<br>நமக்கு நாமே திட்டம்(NNT) 2021-22 ன் கீழ் இந்நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் 9 எண்ணிக்கையில் (150W) Mini Highmast light 12M உயர மின்கோபுர விளக்குகள் அமைக்கும் பணியை மேற்கொள்ள இந்நகர்மன்ற தீர்மான எண்.29 நாள். 20.10.2022-ன் படி 04.11.2022ல் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளின் ஒப்புநோக்கு பட்டியலின் விபரம் கீழ்கண்டவாறு.
<table>
<tr><th>வ. எண்</th><th>ஒப்பந்ததாரரின் பெயர்</th><th>மதிப்பீட்டின் படி விலைவிகிதம்</th></tr>
<tr><td>1</td><td>R.A.குழந்தைவேல்,ஒப்பந்ததாரர், மணப்பாறை</td><td>0.08 % மதிப்பீட்டை விட குறைவு</td></tr>
<tr><td>2</td><td>S.பாஸ்கர், ஒப்பந்ததாரர்,துவரங்குறிச்சி, மணப்பாறை</td><td>0.003 % மதிப்பீட்டை விட கூடுதல்</td></tr>
</table>
எனவே வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளியில் R.A.குழந்தைவேல், மணப்பாறை அவர்கள் 0.08 % மதிப்பீட்டை விட குறைவாக கொடுத்துள்ளதால் ஒப்பந்தப்புள்ளி விதிகளின் படி R.A.குழந்தைவேல், மணப்பாறை ஒப்பந்ததாரரின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்று பணி உத்திரவு வழங்கியதை மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது<br><u>அலுவலகக்குறிப்பு</u>:-<br>1. மன்றம் பதிவு செய்யலாம்<br>(ந.க.எண்: 907/2022/இ1)</td><td>தீர்மான எண்.95<br>அலுவலகக்குறிப்பு பதிவு செய்யப்பட்டது.</td></tr>
</table>

| | | |
|---|---|---|
| 30.11.2022 | **பொருள் – 12**<br>மணப்பாறை நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.16 உள்ள அண்ணா நகர் பகுதியிலுள்ள நகராட்சி பூங்காவினை கலைஞர் நகர்ப்புற மேம்பாட்டுத்திட்டம் 2021-22-ன் கீழ் ரூ.43.00 இலட்சம் மதிப்பீட்டில் பூங்கா மேம்படுத்தும் பணி செய்து முடிக்கப்பட்டடது. மேற்படி பூங்காவில் குடிநீர் வசதி ,தெருவிளக்கு வசதி மற்றும் இதர வசதிகள் செய்து தரக்கோரி அப்பகுதி மக்கள் கோரியதற்கிணங்க, மேற்படி பணியை செய்வதற்கு தயார் செய்யப்பட்ட மதிப்பீடு தொகை ரூ.4,98,000/- மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது<br>**<u>அலுவலகக்குறிப்பு</u>**:-<br>1. மன்றம் அனுமதிக்கலாம்<br>2. பணி செய்வதற்கான செலவினத்தொகையை வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளலாம்<br>(ந.க.எண்: 2142/2022/இ1) | **தீர்மான எண்.96**<br>அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது. |
| 30.11.2022 | **பொருள் – 13**<br>மணப்பாறை நகராட்சிக்குட்பட்ட வாரச்சந்தையில் புதிதாக கலைஞர் நகர்ப்புற மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் வாரச்சந்தையில் வணிக வளாகத்துடன் கூடிய நவீன வாரச்சந்தை கட்டிடம் கட்டும் பணி துவங்கி நடைபெற்று வருகிறது. மேற்படி பணி துவங்கும்பொது மேற்படி வளாகத்தில் காலி இடத்தில் பல ஆண்டிற்கு முன்பு இருந்த பயன்படுத்த இயலாத இரும்பு தகரம் மற்றும் கருங்கற்கள் உட்பட அனைத்தும் பொது ஏலத்தில் விட மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது<br>**<u>அலுவலகக்குறிப்பு</u>**:-<br>1. மன்றம் அனுமதிக்கலாம்<br>(ந.க.எண்: 2143/2022/இ1) | **தீர்மான எண்.97**<br>அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது. |
| 30.11.2022 | **பொருள் – 14**<br>மணப்பாறை நகராட்சிக்குட்பட்ட வாரசந்தையில் புதிதாக கலைஞர் நகர்ப்புற மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் வாரச்சந்தையில் வணிக வளாகத்துடன் கூடிய நவீன வாரச்சந்தை கட்டிடம் கட்டும் பணி துவங்கி நடைபெற்று வருகிறது. எனவே மேற்படி பணியின் இரண்டாவது வணிக வளாக கட்டிடம் கட்டும் இடத்திற்கு முன்புறமாக சுமார் 20 வருடத்திற்கு முன்பாக கட்டபட்ட சமுதாய கழிவறை கட்டிடம் பழுதடைந்த நிலையில் அதனை பயன்படுத்த இயலாத நிலையில் உள்ளது.<br>மேலும் தற்போது நடைபெறும் வாரச்சந்தை திட்டப்பணியில் மேற்படி வளாகத்தின் | **தீர்மான எண்.98**<br>அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது.<br>திருமதி.மு.வசந்தாதேவி, 14-வது வார்டு நகர்மன்ற உறுப்பினரின் ஆட்சேபனைக் கடிதம் ஒட்டப்பட்டுள்ளது. |

| | | |
|---|---|---|
| | உட்பட்ட பகுதியில் நவீன முறையில் ஆண் பெண் இருபாலருக்கும் தனித்தனியாக நவீன பொது கழிப்பிடம் கட்டப்பட்டு வருகிறது.<br>எனவே மேற்படி **20** வருட பழைய சமுதாய கழிப்பிடத்தினை இடித்து அகற்றி புதிதாக நவீன கழிப்பிடத்தினை உருவாக்கி பயன்படுத்தப்படவுள்ளதால் மேற்படி பழைய கழிப்பிடத்தை இடிப்பதற்கும், அதற்காக தயார் செய்யப்பட்ட உத்தேச மதிப்பீடு ரூ.97,000/-ஐ மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது<br>**<u>அலுவலகக்குறிப்பு</u>:-**<br>1. மன்றம் அனுமதிக்கலாம்<br>2. செலவினத்தொகையை வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்<br>(ந.க.எண்: 2144/2022/இ1) | |
| 30.11.2022 | **பொருள் – 15**<br>மணப்பாறை நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.**27** மணப்பாறைபட்டி நகராட்சி பள்ளி முன்புறம் உள்ள பயன்படுத்தபட இயலாத பல ஆண்டிற்கு முந்தைய கட்டிய சிறிய நீர் தேக்கத்தொட்டி இடிந்து விழும் அபாய நிலையில் உள்ளதால் அதனை இடித்து அப்புறப்படுத்தி தர கோரி அப்பகுதி நகர்மன்ற உறுப்பினர் மற்றும் பொது மக்கள் கோரிக்கையின் அடிப்படையில் மேற்படி சிறிய நீர்தேக்கத் தொட்டியினை இடிப்பதற்கும் அதற்காகும் தயார் செய்யப்பட்ட உத்தேச மதிப்பீடு ரூ.**30,000/-**ற்கும் செலவினத் தொகையை வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது<br>**<u>அலுவலகக்குறிப்பு</u>:-**<br>1. மன்றம் அனுமதிக்கலாம்<br>**(ந.க.எண்:2145/2022/இ1)** | **தீர்மான எண்.99**<br>அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது. |
| 30.11.2022 | **பொருள் – 16**<br>மணப்பாறை நகராட்சிக்குட்பட்ட தற்போது பல திட்டப்பணிகள் துவங்கி நடைபெற்று வரும் நிலையில் புதிதாக பல திட்டப்பணிகள் புதிதாக வரும் நிலையில் சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டப்பணிகளும் வந்த வண்ணமாக உள்ளது. மேற்படி திட்டப்பணிகளில் உள்ள ( STRUCTURAL DESIGN)-யை சரிபார்த்து கட்டுமான பணிகளை மேற்கொள்ள உதவுவதற்கு புதிதாக வரும் திட்டப் பணிகளுக்கான அளவீடுகள் எடுக்கவும் (AUTOCAD)-ல் வரைபடம் தயாரிக்கவும் மதிப்பீடுகள் தயார் செய்யவும், விரிவான திட்ட அறிக்கைகள் தயார் செய்யவும், நிர்வாக அனுமதி மற்றும் தொழில் நுட்ப அனுமதி பெறவும் | **தீர்மான எண்.100**<br>அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது.<br>**ஆட்சேபனை தெரிவித்த நகர்மன்ற உறுப்பினர்களின் ஆட்சேபனை ஒட்டப்பட்டுள்ளது.** |

| | | |
|---|---|---|
| | பொறியியல் ரீதியாக தொழில் நுட்ப உதவியாளர் தரம்-1ல் (B.E DEGREE PASSED) ஒருவரை பொதுப்பணித்துறையின் தரப்படுத்தபட்ட விலை விகத அட்டவனை 2022-2023 ல் உள்ள விலையில் கட்டுமான துறை சார்ந்த நிறுவனம் அல்லது பொதுப்பணித்துறை ஒப்பந்ததாரரிடம் இருந்து தகுதி வாய்ந்த பொறியியல் பட்டம் பெற்ற (BE CIVIL DEGREE) அரசு பணிகளில் அல்லது கட்டிட கட்டுமான பணிகளில் மற்றும் AUTO CAD கணினியில் வரைய தெரிந்த பொறியாளரை தினந்தோறும் பணிக்கு அனுப்பவும் அவர்களுக்கு மாதந்தோறும் ஊதியத்தை நகராட்சி வருவாய் நிதியில் வழங்க மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது<br>**<u>அலுவலகக்குறிப்பு</u>**:-<br>1. மன்றம் அனுமதிக்கலாம்<br>(ந.க.எண்:2177/2022/இ1) | **ஆட்சேபனை தெரிவித்த நகர்மன்ற உறுப்பினர்கள்:**<br>**1.**திருமதி.மு.வசந்தாதேவி, 14-வது வார்டு நகர்மன்ற உறுப்பினர்<br>2. திரு.ச.இராமன், 27- வது வார்டு நகர்மன்றஉறுப்பினர்<br>3. திருமதி.ஆர்.தீபா, 22- வது வார்டு நகர்மன்ற உறுப்பினர்<br>4. திருமதி.பா.சுதா, 18- வது வார்டு நகர்மன்றஉறுப்பினர்<br>5. திருமதி.எஸ்.சர்மிளா, 6-வது வார்டு நகர்மன்ற உறுப்பினர்<br>6. திருமதி.வி.அழகுசித்ரா, 2-வது வார்டு நகர்மன்ற உறுப்பினர்.<br>7.திருமதி.எஸ்.செல்லம்மாள், 1- வது வார்டு நகர்மன்ற உறுப்பினர்.<br>8. திரு.பொ.கௌசிக், 26-வது வார்டு நகர்மன்ற உறுப்பினர்.<br>9. திரு.அ.எட்வின் அபிலாஷ், 4-வது வார்டு நகர்மன்ற உறுப்பினர்<br>10. திரு.அ.சவரிமுத்து, 10- வது வார்டு நகர்மன்ற உறுப்பினர்.<br>11. திரு.லெ.எத்திராஜ்,12-வது வார்டு நகர்மன்றஉறுப்பினர் |

<table>
<tr>
<td>30.11.2022</td>
<td>
பொருள் – 17<br>
மணப்பாறை நகராட்சிக்குட்பட்ட நுண் உரம் தயாரிக்கும் வளாகத்தில் சானிட்டரி நாப்கின் மெசின் அமைக்க அறை கட்டுதல் மற்றும் சின்டெக்ஸ் அமைத்து தண்ணீர் வசதி ஏற்படுத்துதல் பணி செய்வதற்கு ரூ.2.60/- இலட்சத்தில் மதிப்பீட்டில் பணி மேற்கொள்ள நகர்மன்ற தீர்மானஎண்.33 நாள்.20.10.2022 ல் அனுமதி வழங்கப்பட்டுள்ளது.<br>
மேற்படி பணியைய் செய்வதற்கு 25.11.2022 ம் தேதி மூடி முத்திரையிடப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள் கோரியதில் கீழ்கண்டவாறு இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் மீது ஒப்புநோக்கு பட்டியல் தயார் செய்யப்பட்டுள்ளது.
<table>
<tr><th>வ. எண்</th><th>ஒப்பந்ததாரரின் பெயர்</th><th>விலை விகிதம்</th></tr>
<tr><td>1</td><td>திரு.ஆர்.ஏ.குழந்தைவேல்,<br>ஒப்பந்தக்காரர், .மணப்பாறை</td><td>0.04% மதிப்பீட்டை விட குறைவு</td></tr>
<tr><td>2</td><td>திரு.D.ஜேம்ஸ்,<br>ஒப்பந்தக்காரர், பொத்தமேட்டுபட்டி, மணப்பாறை.</td><td>0.24% மதிப்பீட்டை விட கூடுதல்</td></tr>
</table>
எனவே மேற்படி வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளியில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி வழங்கிய திரு.ஆர்.ஏ.குழந்தைவேல்,ஒப்பந்தக்காரர்,மணப்பாறை. அவர்கள் 0.04% மதிப்பீட்டை விட குறைவாக இருப்பதால் ஒப்பந்தப்புள்ளியை ஏற்க மன்றத்தின் பொருள் வைக்கப்படுகிறது.<br>
<u>அலுவலகக்குறிப்பு</u>:-<br>
மன்றம் அனுமதிக்கலாம்
</td>
<td>தீர்மான எண்.101<br>அலுவலகக்குறிப்பு<br>அனுமதிக்கப்பட்டது.</td>
</tr>
<tr>
<td>30.11.2022</td>
<td>
பொருள் – 18<br>
மணப்பாறை நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண்.11 மாரியம்மன் கோவில் பின்புறம் திருச்சி செல்லும் ஒருவழிபாதையில் உள்ள நகராட்சிக்கு சொந்தமான நகராட்சி நடுநிலைப்பள்ளி வாளகத்தில் மாற்றுத்திறனாளிகளுக்கு தனியாக தாழ்வான கழிப்பிடம் மற்றும் பள்ளி வளாகத்தை சுற்றியுள்ள சுற்றுசுவர் பழுதடைந்து அதனை இடித்து புதிதாக சுற்றுசுவர் அமைக்க தயார் செய்யப்பட்ட மதிப்பீடு ரூ.9,95,000/- செலவின தொகையினை கல்விநிதியிலிருந்து மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.<br>
அலுவலகக<u>குறிப்பு</u>:-<br>
1. மன்றம் அனுமதிக்கலாம்<br>
செலவினத்தை கல்வி நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.
</td>
<td>தீர்மான எண்.102<br>அலுவலகக்குறிப்பு<br>அனுமதிக்கப்பட்டது.</td>
</tr>
</table>

| | | |
|---|---|---|
| 30.11.2022 | **பொருள் – 19**<br>மணப்பாறை நகராட்சி அலுவலகத்தில் தென் கிழக்கு மூலையில் தரைதளத்தில் பழுதடைந்துள்ள கழிப்பிடத்தை இடித்துவிட்டு அலுவலக கட்டிடத்தின் வெளிப்புறத்தில் புதிதாக நவீன கழிப்பிடம் கட்டவும், ஏற்கனவே கழிப்பிடமாக உள்ள அறையை நகராட்சி வரிவசூல்மையமாக மாற்றியமைக்கும் பணிக்கு தயார் செய்யப்பட்ட உத்தேச மதிப்பீடு ரூ.9,97,000/- செலவின தொகையினை வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது<br>**அலுவலககுறிப்பு:-**<br>மன்றம் அனுமதிக்கலாம் | **தீர்மான எண்.103**<br>அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது.<br>**ஆட்சேபனை தெரிவித்த நகர்மன்ற உறுப்பினர்களின் ஆட்சேபனை ஒட்டப்பட்டுள்ளது.**<br>**ஆட்சேபனை தெரிவித்த நகர்மன்ற உறுப்பினர்கள்:**<br>1. திரு.ச.இராமன், 27- வது வார்டு நகர்மன்றஉறுப்பினர்<br>2. திருமதி.ஆர்.தீபா,22- வது வார்டு நகர்மன்றஉறுப்பினர்<br>3. திருமதி.பா.சுதா, 18- வது வார்டு நகர்மன்றஉறுப்பினர்<br>4. திருமதி.எஸ்.சர்மிளா, 6-வது வார்டு நகர்மன்ற உறுப்பினர்<br>5. திருமதி.வி.அழகுசித்ரா, 2-வது வார்டு நகர்மன்ற உறுப்பினர்.<br>6.திருமதி.எஸ்.செல்லம்மாள், 1- வது வார்டு நகர்மன்ற உறுப்பினர்.<br>7. திரு.பொ.கௌசிக், 26-வது வார்டு நகர்மன்ற உறுப்பினர்.<br>8. திரு.அ.எட்வின் அபிலாஷ், 4-வது வார்டு நகர்மன்ற உறுப்பினர் |

| | | |
|---|---|---|
| | | 9. திரு.அ.சவரிமுத்து,10- வது வார்டு நகர்மன்ற உறுப்பினர்.<br>10. திரு.லெ.எத்திராஜ்,12-வது வார்டு நகர்மன்றஉறுப்பினர் |
| 30.11.2022 | **பொருள் – 20**<br>நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களது சுற்றறிக்கை ந.க.எண்.1725/2022/எம்3 நாள்.24.02.2022- ல் தெரிவித்துள்ளபடி, நகராட்சிகளுக்கு புதிய ஈப்பு வாகனம் (GEM Rate) விலைக்கு மிகாமல் கொள்முதல் செய்திட அறிக்கை வெளியிடப்பட்டுள்ளது. அதனை தொடர்ந்து நகராட்சி நிர்வாக இயக்குநர் சென்னை அவர்களின் உத்திரவு ந.க.எண்.10290/2022/எம்3 நாள்.19.05.2022 - ல் தெரிவித்துள்ளபடி, மணப்பாறை நகராட்சிக்கு நகர்மன்ற தலைவர் மற்றும் நகராட்சி ஆணையர் அலுவலக பயன்பாட்டிற்கு புதியதாக ஒரு ஸ்கார்பியோ வாகனம் (மற்றும்) பொலிரோ (Bolero) ஈப்பு வாகனம் அரசு நிர்னயம் செய்யப்பட்ட (GEM rate) விலைக்கு மிகாமல், வாங்கி கொள்வதற்கு அனுமதி வழங்கப்பட்டது. அதன்படி தற்போது மஹிந்திரா & மஹிந்திரா நிறுவனத்தில் பொலிரோ (Bolero) ஈப்பு வாகனம் மட்டும் இருப்பில் உள்ளதாக தெரிவித்ததால் அதற்குரிய தொகை செலுத்தி பொலிரோ வாகனம் வாங்கப்பட்டுள்ளது. புதிய வாகனம் வாங்கப்படும் போது தற்காலிக பதிவு செய்து வழங்கப்பட்டுள்ளது. எனவே மேற்கண்ட இரண்டு வாகனத்திற்கும் வட்டார போக்குவரத்து துறையில் நிரந்தர பதிவு எண் சாலை வரி, வாகன காப்பீடு,(Life Tex) மற்றும் இதரவரிகள் செலுத்தவும் மேலும் மேற்கண்ட வாகனத்தில் இதர உதிரி பாகங்கள் பொருத்தவும் ஆகும் உத்தேச செலவினம் பணிக்கு ரூ.9.97 இலட்சத்திற்கும் செலவின தொகையினை வருவாய் நிதியில் மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.<br>**<u>அலுவலகக்குறிப்பு</u>:**<br>1. மன்றம் அனுமதி வழங்கலாம்.<br>**ந.க.எண். 00683 /2022/இ1** | **தீர்மான எண்.104**<br>அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது. |

**(ஒம்) கீதா.ஆ.மைக்கேல்ராஜ்**
**நகர்மன்றத் தலைவர்**
**மணப்பாறை நகர்மன்றம்**